## தகுதிபெறுநர்களின் பெயர்ப் பட்டியலினை பிரசித்தப்படுத்தல்

- நலன்புரி நன்மைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகுதிபெறுநர்களின் பெயர்ப் பட்டியல் பிரதேச செயலகம் மற்றும் நலன்புரி நன்மைகள் சபையின் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

## மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனையினைக் கோருதல்

- தகுதிபெறுநர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்பாக விண்ணப்பதாரரின் மேன்முறையீடு மற்றும் பொதுமக்களின் ஆட்சேபனை முன்வைப்பதற்கான வாய்ப்பினை வழங்குதல்.
- மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனை நிகழ்நிலை மூலம் அல்லது விண்ணப்பப் படிவத்தில் சமர்ப்பிக்கலாம்.

## மேன்முறையீட்டுக் குழுவின் சிபாரிசு மற்றும் அங்கீகாரம்

- மாவட்ட செயலாளரினால் நியமிக்கப்பட்ட மேன்முறையீட்டுக் குழுவினால் மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை விசாரணை செய்தல்.
- மேன்முறையீடுகளை விசாரணை செய்ததன் பின்னர் தகுதிபெறுநர்களின் பெயர்ப் பட்டியல் மேல்முறையீட்டுக் குழுவினால் நலன்புரி நன்மைகள் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும்.

## நலன்புரி நன்மைக் கொடுப்பனவை வழங்குதல்

- நலன்புரி நன்மைகள் நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தகுதிபெற்ற பயனாளிகளின் இறுதிப் பட்டியலுக்கு, நலன்புரி நன்மைகள் சபை அங்கீகாரத்தினை வழங்குதல்.
- நலன்புரி நன்மைக் கொடுப்பனவை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்புச் செய்தல்.


මුදල්, ආර්ථික ස්ථායිකරණ සහ
ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
**Ministry of Finance, Economic Stabilization and National Policies**


Welfare Benefits Board
WBB
Sri Lanka
අවශ්‍ය තැන අස්වැසුම
தேவை நாடுவோருக்கான சேவை
INDEED FOR IN NEED


**மேலதிக விபரங்களுக்கு**
**நலன்புரி நன்மைகள் சபை**
முதலாவது மாடி
புதிய கட்டிடம்
நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
கொழும்பு - 01

தொலைபேசி இல.- 0112484600 நீட்டிப்பு 4117
தொலைநகல் இல. - 011-2151482
மின்னஞ்சல் - welfarebenefitboard2016@gmail.com
info@iwms.wbb.gov.lk



Printed at the State Printing Corporation


# සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
# நலன்புரி நன்மைகள் சபை
# WELFARE BENEFITS BOARD

## நலன்புரி நன்மைகள் சபை

- 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின்கீழ் அனைத்து அரசாங்க நலன்புரி நன்மைகளையும் வழங்குவதற்கான பணியினை நிறைவேற்றுவதற்காகத் தாபிக்கப்பட்ட அரச நிறுவனமாகும்.
- நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் சபையினால் நிர்வகிக்கப்படுகிறது. குறித்த சட்டத்தின்படி தலைவர் ஆணையாளராகவும் செயற்படுகின்றார்.
- அனைத்து மாவட்ட செயலாளர்களும் மேலதிக நலன்புரி நன்மைகள் ஆணையாளர்களாகவும், அனைத்து பிரதேச செயலாளர்களும் பிரதி நலன்புரி நன்மைகள் ஆணையாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- நலன்புரி நன்மைகளை பெறுவதற்குத் தகுதியுடையவர்களை அடையாளம் காண்பதற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்து பராமரிப்பதற்கான திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தல், அது தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் என்பன முக்கிய பணிகளாகும்.
- பிரதேச செயலகங்களில் சமூகப் பாதுகாப்புத் தகவல் முறைமையினைக் கையாள்வதற்கும் விண்ணப்பதாரர்கள் மற்றும் பயனாளர்களுடனான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளவும் சமூக நலன்புரி நன்மைகள் தகவல் அலகு அமைக்கப்பட்டுள்ளது.

## சமூகப் பாதுகாப்பு தகவல் முறைமை
## Social Registry Information System

- சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நன்மைகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய தனிநபர்கள் அல்லது குடும்பங்களை அடையாளம் காண்பதற்குரிய நலன்புரி நன்மை தெரிவு அளவுகோல்களின் அடிப்படையில் தகுதியைக் கணக்கிடக்கூடியதும், வழங்கக் கூடிய நன்மைகளை நேரடியாக வங்கிக் கணக்குகளுக்கு அனுப்ப முடியுமான மற்றும் பயனாளிகளின் சமூகப் பொருளாதார நிலையைக் கண்காணிக்கக்கூடியதுமான ஒரு கணினித் தகவல் முறைமை இதுவாகும்.
- அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், முன்மொழிவுகளை ஒரே முறைமையின்கீழ் ஒருங்கிணைப்பதற்கு ஏதுவான ஆற்றலினை இக்கணினி தகவல் முறைமை கொண்டுள்ளது.
- மிகச் சரியாகவும், வெளிப்படைத் தன்மையைப் பாதுகாக்கும் வகையிலும் விண்ணப்பதாரர் மற்றும் பயனாளிகளின் தகவல்களை சேகரிப்பதற்கும், இற்றைப்படுத்துவதற்கும் இணையதள மற்றும் மொபைல் பிரயோகிகள் (Web and Mobile Applications) மூலம் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குரிய ஆற்றல் காணப்படுகின்றது.
- அவசர, அனர்த்த பொருளாதார நிலை அல்லது சமூக பாதிப்புக்களின் போது சமூக பாதுகாப்பு மற்றும் அவசர நிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்களை உடனடியாகவும், மிகச் சரியாகவும், இலக்கிடப்பட்ட வகையிலும் இனம் காண்பதற்கு இக்கணினி தகவல் முறைமையினால் ஏதுவாக உள்ளது.
- சமூக சேவைகள் மற்றும் நலன்புரி நன்மைகளுக்காக பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இத்தகவல் முறைமையுடன் இணைந்து கொள்ள முடியும் என்பதுடன் அதன் மூலம் சமூகப் பாதுகாப்பிற்கு தகுதியானவர்களை துல்லியமாக அடையாளம் காண முடியும்.
- விண்ணப்பதாரர்கள் அல்லது பயனாளிகள் வழங்கிய தகவலை மீளாய்வு செய்வதற்கும் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடைகின்ற தகவலைத் தொடர்ந்து முறைமையில் மேம்படுத்துவதற்குமான வசதி இவ்முறைமையில் உள்ளது.
- நலன்புரி நன்மை மற்றும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு செலவாகும் நிர்வாகச் செலவுகளைக் குறைக்கவும், நலன்புரி நன்மை இரட்டைக் கொடுப்பனவுகளைத் தவிர்க்கவும் இக்கணினி முறைமை உதவுகிறது.

## இவ்நிகழ்ச்சித்திட்டம் எவ்வாறு செயற்படுகிறது?

### நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்பம் கோரல்

- நலன்புரி நன்மைகளைக் கோரும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தினை நலன்புரி நன்மைகள் சபை பரிந்துரைத்தவாறு நிகழ்நிலை மூலம் அல்லது படிவங்கள் மூலமாக சமர்ப்பிக்கலாம்.

### அமைவிட தகவல் கணக்கெடுப்பு

- அனைத்து விண்ணப்பங்களும் சமூக பாதுகாப்பு தகவல் முறைமையில் உள்ளீடு செய்யப்படுவதுடன் விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் **QR** குறியீடும் **HH** இலக்கமும் கணினி முறைமை மூலம் வழங்கப்படும்.
- **QR** குறியீடுகளை வைத்திருக்கும் விண்ணப்பதாரர்களின் வீடுகளுக்கு கணக்கெடுப்பு அலுவலரொருவர் சென்று மேலதிகத் தகவல்களைப் பெறுவதுடன் கண்காணிப்பினையும் மேற்கொள்வார்.
- மொபைல் பிரயோக மென்பொருள் மூலம் அமைவிடம் தொடர்பான தகவல் பெறப்படுகிறது.

### தெரிவுக் குழுவின் சிபாரிசும், அங்கீகாரமும்

- கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் விண்ணப்பதாரர்கள் பற்றிய தகவல்களை பரிசீலித்தல் மற்றும் தெரிவுக்கான அளவுகோல்களின் அடிப்படையில் தகைமையினை கணக்கெடுப்பு செய்வதற்கான அங்கீகாரமும் வழங்கப்படும்.
- தெரிவுக்கான அளவுகோல்கள் மற்றும் புள்ளி வழங்கல் முறையின்படி கணக்கெடுப்புக்குட்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் கணினி முறைமை மூலம் புள்ளி வழங்கப்படும்.